# அனைத்திந்தியத் தமிழ் எழுத்தாளர் பெருமன்றம்

(தமிழ் எழுத்தாளர் சங்கங்களும், எழுத்தாளர்களும் இணைந்த அமைப்பு)

14-G., T. P. கோவில் லேன், திருவல்லிக்கேணி, சென்னை-5.


[illegible]
[illegible].

தேதி 11-2-1961


செயலாளர் முதல்வர்:
கொடுமுடி ராஜகோபாலன்,
14-G., T. P. கோவில் லேன்,
திருவல்லிக்கேணி,
சென்னை-5.

★

செயலாளர்கள்:
ப. ந. தியாகராஜன்,
31-B, ராஜா பசந்தராய் ரோடு,
கல்கத்தா-29.

—

நாரண துரைக்கண்ணன்,
நெ. 10, ஆருவது தெரு,
சௌராஷ்டிர நகர்,
சென்னை-24.

—

அ. வெ. ர.
கிருஷ்ணசாமி ரெட்டியார்,
24, தேரடிக் கடைத்தெரு,
திருச்சிராப்பள்ளி-2.

★


பேரன்புமிக்க கல்வி வள்ளல் திரு [illegible] அவர்கள் திருமுன்பு,

திரு கோ. [illegible] எழுதியது.

மதிப்புடையீர்,

வணக்கம். பாரத தேசத்திலுள்ள தமிழ் எழுத்தாளர் பேரவையின் கூட்டம் 29.1.61ல் டாக்டர் சுப்ராயன் அவர்கள் தலைமையில் நடைபெற்று அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.

தாங்கள் இவ் அமைப்பின் ஆயுள் உறுப்பினராக இருந்து எங்கள் பணிக்குத் துணைபுரிய வேண்டும் என வேண்டிக் கொள்கிறேன். இந்த அமைப்பு பற்றிய அறிக்கையும் தகவல்களும் இத்துடன் இணைத்துள்ள அச்சிட்ட துண்டுப் பிரசுரங்களில் காணலாம்.

தங்கள் உபயோகத்திற்காக இத்துடன் உறுப்பினர் விண்ணப்பமும் வைத்துள்ளேன். அதனை நிரப்பி ஆயுள் உறுப்பினர் கட்டணத் தொகை ரூபாய் நூறு (Rs 100/-) அனுப்பவும் வேண்டுகிறேன். மற்றும் தங்கள் அன்பை நாடுகிறேன்.

தங்கள் அன்புள்ள

திரு கோ. [illegible].

> குறிப்பு: கடிதத்தில் கையெழுத்து செய்திருப்பவர் முகவரிக்குத் தங்கள் பதிலை தெரிவிக்கும்படி வேண்டுகிறோம்.

# அனைத்திந்தியத் தமிழ் எழுத்தாளர் பெருமன்றம்

**சென்னை.**

## நேர் உறுப்பினர் விண்ணப்பம்

செயலாளர் அவர்களுக்கு,

பெருமன்றத்தின் நேர் உறுப்பினராக சேர்த்துக்கொள்ள வேண்டுகிறேன். பெருமன்றத்தின் நோக்கத்தை ஏற்றுக்கொண்டு விதிகளுக்குட்பட்டு நடப்பதாக உறுதி கூறுகிறேன். இத்துடன் நுழைவுக் கட்டணம் ரூ. 1-ம், ஆண்டுக் கட்டணம் ரூ. 4-ம் ஆக ரூ. 5 அனுப்பியிருக்கிறேன்.

விண்ணப்பதாரின் கையெழுத்து

பெயர் :

புனைப்பெயர் :

தகப்பனார் பெயர் :

சொந்த ஊர் :

பிறந்த தேதி : (வயது )

அறிந்த மொழி :

எழுத்துத் துறையில் : ஆண்டுகளாக எழுதி வருகிறேன்.

தொழில் :

முகவரி :

எழுதிய நூல்கள் :
அதிகமாக இருப்பின்
தனியாகப் பட்டியல்
எழுதி யிணைக்கவும்.

இதர குறிப்புக்கள்
எவையேனும் இருந்தால்
குறிப்பிடவும்.

கையெழுத்து

# அனைத்திந்தியத் தமிழ் எழுத்தாளர் பெருமன்றம்,

14-G துளசிங்கப்பெருமாள் கோவில் சந்து, திருவல்லிக்கேணி,

சென்னை-5.

அன்புடையீர்,

வணக்கம் பல.

நாடு முழுவதிலுமுள்ள தமிழ் எழுத்தாளர் சங்கங்கள் பலவற்றை இணைத்து அகில இந்திய அமைப்பாக அனைத்திந்தியத் தமிழ் எழுத்தாளர் பெருமன்றம் 29—1—61ந் தேதி ஆரம்பிக்கப்பட்டிருப்பதை தங்களுக்கு அறிவித்துக்கொள்ளுகிறோம்.

இந்தப் பெருமன்றத்தில் இணைந்துள்ள தமிழ் எழுத்தாளர் சங்கங்கள் எந்த ஒன்றிலாவது அங்கத்தினராக உள்ளவர்கள் பெருமன்றத்தின் அங்கத்தினராகவும் கருதப்படுவார்கள். இணைப்புச் சங்கம் எதிலும் அங்கத்தினராக இல்லாத எழுத்தாளர்கள் பெருமன்றத்தில் நேர் உறுப்பினராக சேர்ந்துகொள்ள வகை செய்யப்பட்டிருக்கிறது.

தமிழ் எழுத்துத் துறையில் சிறந்த பணி புரிந்துவரும் தாங்கள் பெருமன்றத்தின் நேர் உறுப்பினராக இருக்கவேண்டும் என்பது எங்கள் வேண்டுகோள். தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு தங்கள் ஒத்துழைப்பையும், ஆதரவையும் உதவவேண்டுமென்று வேண்டுகிறோம்.

இத்துடன் இருக்கும் நேர் உறுப்பினர் விண்ணப்பத் தாளை பூர்த்திசெய்து தொகையுடன் திரு. கண. முத்தையா, பொருளாளர் அனைத்திந்தியத் தமிழ் எழுத்தாளர் பெருமன்றம், 393, பைக் கிராப்ட்ஸ் ரோடு, சென்னை-14. என்ற முகவரிக்கு உடன் அனுப்பிக்கொடுத்து உதவவேண்டுமென கேட்டுக்கொள்ளுகிறோம்.

தங்கள் உண்மையுள்ள,

நாரண துரைக்கண்ணன், சென்னை. — கொடுமுடி ராஜகோபாலன்

ப. ந. தியாகராஜன், கல்கத்தா. — செயலாளர் முதல்வர்.

அ. வெ. ர. கிருஷ்ணசாமி ரெட்டியார், திருச்சி.

செயலாளர்கள்.

# எழுத்தாளர்கள் சிந்தனைக்கு

1960, நவம்பர் 12, 13 தேதிகளில் கல்கத்தாவில் அகில இந்திய தமிழ் எழுத்தாளர் மாநாடு நடைபெற்றது. இம் மாநாட்டின் முக்கிய நோக்கம், பாரதநாட்டின் பல பகுதிகளில் பணியாற்றிவரும் தமிழ் எழுத்தாளர் சங்கங்களை ஒன்று சேர்த்து, அகில இந்திய தமிழ் எழுத்தாளர் சங்கங்களின் சம்மேளனம் அமைத்தலைப்பற்றி யோசித்து, முடிவு செய்து, சம்மேளனத்தை அமைத்து, சம்மேளனத்தின் தலைவர், செயலாளர், செயற்குழு உறுப்பினர்கள் ஆகியவர்களைத் தேர்ந்தெடுத்தல்' என்பதாகும்.

இந்த நோக்கத்தை விவரித்து கல்கத்தா தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் செயலாளரும், அகில இந்திய தமிழ் எழுத்தாளர் மாநாட்டின் பொதுச் செயலாளருமான திரு. ப. ந. தியாகராஜன் 10—8—60 தேதி பாரதத்தின் பல்வேறு பகுதிகளில் இயங்கிவரும் தமிழ் எழுத்தாளர் சங்கங்களுக்கு ஒரு சுற்றறிக்கை அனுப்பியிருந்தார்.

அதன் பிறகு சம்மேளனத்திற்கான நகல் யதாஸ்தும், விதிகளும் தயாரித்து எல்லா சங்கங்களுக்கும் அனுப்பி வைத்து ஒவ்வொரு சங்கமும் தன் செயற்குழுவைக் கூட்டி, நகல் யதாஸ்தையும் விதிமுறையையும் ஆராய்ந்து, நகலில் விதி மாற்றங்கள் எவையேனும் செய்தால் அவைகளை தனக்குத் தெரிவிக்க வேண்டுமென்று ப. ந. தியாகராஜன் வேண்டியிருந்தார்.

பிறகு ஒவ்வொரு சங்கமும் மாநாட்டிற்குத் தனது பிரதிநிதியை தேர்ந்தெடுத்து அனுப்ப வேண்டு மென்றும், சங்கத்தின் தலைவரும், செயலாளரும் கௌரவ பிரதிநிதிகளாக வரவேற்கப்படுகிறார்கள் என்றும் அறிவித்திருந்தார். இந்த வேண்டுகோளின் பேரில் ஒவ்வொரு சங்கமும் தான் அனுப்பும் பிரதிநிதிபற்றிய யார்—எவர் குறிப்பும் அனுப்பும்படி வேண்டியிருந்தார்.

சென்னையில் உள்ள தமிழ் எழுத்தாளர் சங்கம் தனது பிரதிநிதிகளாக பின் வருபவர்கள் மாநாட்டில் கலந்து கொள்வார்கள் என்று யார்—எவர் குறிப்பும் அனுப்பி வைத்திருக்கிறது. தலைவர் திரு. க. அப்பாத்துரை, துணைத் தலைவர் மயிலை சீனி வெங்கடசாமி, ஊ. ஜெயராமன், M. S. சம்பந்தம் ஆகிய நால்வரின் யார்—எவர் குறிப்பும் அனுப்பி வைத்து இருக்கிறது.

அதன் பின்னர் சென்னையில் உள்ள தமிழ் எழுத்தாளர் சங்கச் செயற்குழு 5—11—60 தேதி கூடி பின் கண்ட தீர்மானத்தை நிறைவேற்றி கல்கத்தாவுக்கும் தமிழகத்திலும் தமிழகத்திற்கு அப்பால் இயங்கும் தமிழ் எழுத்தாளர் சங்கங்களுக்கும் ஒரு சுற்றறிக்கை அனுப்பி வைத்திருக்கிறது. சென்னைத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் செயற் குழுவின் தீர்மானம் பின்வருமாறு.

1. (அ) நம் தமிழ் எழுத்தாளர் சங்கமானது சென்ற எட்டு ஆண்டுகளாக இந்தியா முழுவதிலும், வெளி நாடுகளிலும், உள்ள தமிழ் எழுத்தாளர்கள் அனைவரையும் ஒன்று திரட்டி அவர்களின் ஒரே மத்திய அமைப்பாக இயங்கி வருகின்றபடியாலும், கல்கத்தா தமிழ் எழுத்தாளர் சங்கம் அமைக்க விரும்புகின்ற அகில இந்திய தமிழ் எழுத்தாளர் சம்மேளனத்தின் நோக்கங்களை இச்சங்கம் ஏற்கனவே

நிறைவேற்றி வருகின்றபடியாலும், "அகில இந்திய தமிழ் எழுத்தாளர் சம்மேளனம் என்னும் பெயரால் புதியதோர் அமைப்பைக் காணவேண்டிய தேவையில்லை என்று இச்சங்க செயற்குழு முடிவு செய்கிறது. ஆகவே அப்படிப்பட்ட ஒரு சம்மேளனம் அமைக்கும் முயற்சியைக் கல்கத்தா தமிழ் எழுத்தாளர் சங்கத்தார் அன்புகூர்ந்து கைவிட்டுவிடவேண்டும்" என இச் சங்கம் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறது.

(ஆ) இத்தீர்மானத்தை உடனடியாக எல்லாத் தமிழ் எழுத்தாளர் சங்கங்களுக்கும், முதன்மையாளர்களுக்கும் அனுப்ப வேண்டும் என்று இச் செயற்குழு முடிவு செய்கிறது.

(2) அகில இந்திய தமிழ் எழுத்தாளர் சம்மேளனம் உருவாக்கும் முயற்ச்சி தேவையில்லை என்று இச் சங்கச் செயற்குழு முடிவு செய்துள்ளபடியால் அச்சம்மேளன அமைப்புக்காகக் கல்கத்தாவில் நடைபெறவிருக்கும் அகில இந்திய தமிழ் எழுத்தாளர் மாநாட்டிற்கு நம் சங்கச்சார்பில் பிரதிநிதிகளாக யாரையும் அனுப்புவதில்லை என்று இச்சங்கச் செற்குழு முடிவு செய்கிறது.

இவ்வாறு தீர்மானத்தை நிறைவேற்றி, தீர்மானத்தின் நகல் பிரதியை கல்கத்தா தமிழ் எழுததாளர் சங்கச் செயலாளருக்கு சென்னைத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு. ஜெயராமன் 6—11—60 தேதி அனுப்பி வைத்து பின்வரும் கடிதமும் எழுதியிருக்கிறார்.

அன்புடையீர்,

தங்கள் கடிதம் 1ம், அகில இந்திய தமிழ் எழுத்தாளர் சங்க நோக்க விதித்தொகுதி 1ம் கிடைத்தன. அவற்றை 5—11—60 தேதி சனிக்கிழமை மாலை 6-30 மணிக்குக் கூடிய சங்கச் செயற்குழுவின் முன் வைத்தேன். செயற்குழு சம்மேளனத்தின் நோக்கங்களை நன்கு பரிசீலித்துப் பார்த்து மேற்படி சம்மேளனத்தின் குறிக்கோள்களையே கொண்டு சென்னையில் உள்ள தமிழ் எழுத்தாளர் சங்கம் இயங்கி வருவதால் வேறு தனிப்பட்ட சம்மேளனம் ஒன்று காண வேண்டிய அவசியமில்லை என்று முடிவு பண்ணியிருக்கிறது. அகிலஇந்திய சம்மேளனத்தை ஏற்படுத்துவதற்காகவே தங்கள் அகில இந்திய மாநாடு நடக்கவிருப்பதால் அதில் எங்கள் பிரதிநிதிகள் கலந்து கொள்வது சரியல்ல என்றும் குழு தீர்மானித்திருக்கிறது. எனவே, நானும் தலைவரும் மற்றவர்களும் வரவிருந்ததை நிறுத்திக் கொண்டுள்ளோம். செயற்குழு புரிந்த தீர்மானங்களைத் தனியாக இக்கடிதத்துடன் இணைத்துள்ளேன். அன்பு கூர்ந்து இத் தீர்மானங்களைத் தங்கள் பொருளாலோசனைக் குழுக் கூட்டத்தில் படிக்குமாறு வேண்டுகிறேன். எங்கள் கருத்துக்கு உரிய மதிப்பளிப்பீர்கள் என்று நம்புகிறேன்.

வணக்கம்

ஊ. ஜெயராமன்

6—11—60

இத்தகைய கடிதம் தபால்தலை குறைவாக ஒட்டப்பெற்று ஒவ்வொரு சங்கத்திற்கும், ஒருசில முக்கியஸ்தர்களுக்கும், அனுப்பப் பெற்று, பலரால் திருப்பியனுப்பப் பெற்று, சிலரால், பெற்றுக் கொள்ளப்பட்டதாகத் தெரிகிறது.

கல்கத்தாவில் கூடிய அகில இந்திய தமிழ் எழுத்தாளர் மாநாட்டின் விஷயாலோசனைக் கமிட்டிக் கூட்டத்தில் சென்னைத் தமிழ் எழுத்

தாளர் சங்கத்தின் செயற்குழு தீர்மானமும், பொதுச் செயலாளர் திரு. ஊ. ஜெயராமன் அவர்கள் கடிதமும் படிக்கப் பெற்றது. அத்துடன் சென்னைத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் வேண்டுகோளின் பேரில் சம்மேளனம் தேவையில்லை என்று டில்லியிலிருந்து சாலை இளந்திரையன் அவர்களும், மதுரையிலிருந்து திரு. அரு. தியாகராசன் அவர்களும் (இவர்கள் இருவரும் சென்னைத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் செயற்குழுவில் இவ்வாண்டு வெளியூர் அங்கத்தினர்கள்) எழுதிய கடிதமும் படிக்கப்பெற்றது.

சம்மேளனத்தை வரவேற்று தமிழ் எழுத்தாளர் சங்கங்களின் பல்வேறு அமைப்புக்கும் தனிப்பட்ட எழுத்தாளர்கள் பலரும் எழுதியிருந்த கடிதங்களும் படிக்கப்பெற்றன.

சென்னைத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் செயற்குழு 5-11-60 தேதி செய்த முடிவு சரியானதல்ல என்பதை அ. வெ. ர. கிருஷ்ணசாமி ரெட்டியார் பொருள் ஆலோசனைக் குழுவுக்கு எடுத்து விவரித்தார். அவர் எடுத்துக் காட்டிய விளக்கங்கள் இவை:

சென்னைத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் பேரவைக் கூட்டம் 19-1-58ல் கூடியது. அப்பொழுது தலைவராக இருந்த திரு. சாமிநாத சர்மாஜி அவர்கள் பேரவைக் கூட்டத்தில் பேசுகையில் கடைசியாகக் குறிப்பிட்ட வாசகங்கள் இவை:

"சென்னையைத் தவிர்த்து சில ஊர்களில் தமிழ் எழுத்தாளர் சங்கங்கள் தோன்றி செயலாற்றி வருகின்றன. சில ஊர்களில் தோன்றிக்கொண்டு வருகின்றன. இவை யனைத்திற்கும் தாய்ச் சங்கமாக நம் சங்கம் இருந்து இவற்றை நம்மோடு இணைத்துக்கொள்ள சில வழிமுறைகளை வகுத்துக்கொள்ள வேண்டும்."

இந்தக் குறிப்பு சென்னைத் தமிழ் எழுத்தாளர் சங்கம் வெளியிடும் 'பாரதி' பத்திரிகை 1958 பிப்ரவரி மாத இதழில் 2வது பக்கத்தில் பிரசுரமாகியிருக்கிறது.

இதனை பாரதியில் பார்த்த பிறகு திருச்சிராப்பள்ளியிலும், மதுரையிலும், கரூரிலும் நடைபெற்ற எழுத்தாளர் மாநாடுகள், சம்மேளனம் அமைக்கப்பட வேண்டும் என்ற தீர்மானத்தை நிறைவேற்றின.

21-9-58ல் சென்னை எழுத்தாளர் சங்க இடைக்கால பேரவைக் கூட்டம் கூடியது. அந்தப் பேரவையில் சென்னைத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தையே சம்மேளன அமைப்பாக மாற்ற வேண்டுமென்ற தீர்மானம் என்னால் பிரரேபிக்கப்பட்டு, நாகர்கோவில் எழுத்தாளர் சங்கத்தின் சார்பில் திரு. டானியல் எம். எல். ஏ. அவர்களால் ஆமோதிக்கப்பட்டு தீர்மானம் ஒரு முகமாக நிறைவேற்றப்பட்டது.

இந்த செய்தியை விவரித்து சென்னைத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் செயற்குழு 18—1—59ல் வெளியிட்ட தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் எட்டாவது ஆண்டு அறிக்கையில் பக்கம் 6ல் பாரா 6ல் கூறியிருப்பதாவது:

21—9—58 இடைக்காலப் பேரவை தமிழ் எழுத்தாளர் சங்க சம்மேளன அமைப்பு, கட்டிட நிதிக் குழு அமைப்பு சம்பந்தமாக தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. சம்மேளனம் அமைப்பு விதிகள் தயா

ரிக்க திருவாளர்கள் அ. வெ. ர. கிருஷ்ணசாமி ரெட்டியார், ஏ. ஜி. வெங்கடாச்சாரி, சாமி சிதம்பரனுர், ப. ஜீவானந்தம், எம். பி. சுப்ர மண்யம், வ. விஜய பாஸ்கரன் ஆகியோர் அடங்கிய குழு அமைக்கப் பட்டது.

அதே அறிக்கையில் பக்கம் 11ல் எழுத்தாளர் சங்க சம்மேளனம் என்ற தலைப்பில் செயற்குழு வெளியிட்டிருக்கும் செய்தி இது :

"எழுத்தாளர் சங்க சம்மேளனம்"

சென்னை இடைக்காலப் பேரவையில் நிறைவேறிய இன்னெரு முக்கியமான தீர்மானம் எழுத்தாளர் சங்க சம்மேளனம் ஒன்று அமைப்பது பற்றியதாகும். அங்கங்கே உள்ள தமிழ் எழுத்தாளர் சங்கங்களை யெல்லாம் இணைத்து சம்மேளனம் அமைப்பது என்பது அந்தத் தீர்மானம். இது நம் சங்க எழுத்தாளர் வளர்ச்சி சரித்திரத்தில் முக்கிய கட்டமாகும்.

இது சம்பந்தமாக திருச்சி அ. வெ. ர. கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்கள் பெருத்த அக்கரை எடுத்துக் கொண்டிருக்கிருர்கள். இதற் கான வழிவகைகளை வகுக்க அமைக்கப்பட்ட கமிட்டியும் பூர்வாங்கமாக தயாரிக்கப்பட்டிருக்கும் விதிகளை ஆராய ஆரம்பித்திருக்கிறது" என்று திட்டவட்டமாக அந்த அறிக்கை கூறுகிறது.

இதன் பின்னர் சம்மேளனம் அமைக்கத் தங்கள் சம்மதத்தை அறிவித்து ஒவ்வொரு தமிழ் எழுத்தாளர் சங்கமும் சென்னை சங்கத் திற்கு கடிதங்கள் எழுதியிருக்கின்றன. கல்கத்தாவில் கூடிய தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் மாநாட்டில் பம்பாய் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் தலைவர் திரு. மாயாவி, சம்மேளன தீர்மானத்தை பிரரே பிக்க, டில்லி தமிழ் எழுத்தாளர் சங்கத்தைக் சார்ந்த திரு. வைத்திய நாதன் ஆதரிக்க தீர்மானம் ஒருமுகமாக நிறைவேற்றப்பட்டது. இந்த மாநாட்டில் சென்னைத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் தலைவரும், பொருளாளரும் பிரதம விருந்தினராகவும், மாநாட்டின் தலைவராகவும் விளங்கினர்.

இதற்கு அப்பால் சென்னையில் 1959 ஆகஸ்ட் 2 தேதி நடை பெற்ற தமிழ் எழுத்தாளர் ஏழாவது மாநாட்டில் திரு. மகரம் அவர் களால் பிரரேபிக்கப்பட்டு என்னுல் ஆதரிக்கப்பட்ட தீர்மானத்தின் வாசகம் இது :

"தேசமெங்கும் உள்ள பல்வேறு தமிழ் எழுத்தாளர் சங்கங்கள் சேர்ந்த சமஷ்டி அமைப்பாக நமது சங்கத்தை உருவாக்குவதற்கு நடைபெற்று வரும் முயற்சிகளை துரிதப்படுத்துமாறு சங்கச் செயற் குழுவை இந்த மாநாடு கேட்டுக்கொள்ளுகிறது."

இந்த தீர்மானத்தின் விபரம் 'பாரதி' 1959 செப்டம்பர் இதழில் 4-ம் பக்கத்தில் இரண்டாவது காலத்தில் 10-வது தீர்மானமாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

சென்னையில் உள்ள தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் செயற்குழு தான் மேற்கொண்ட வேலையை, பேரவையும் மாநாடும் இக் கட்ட ளையை செயலாக்க முனையாமல் ஆண்டை வீண் ஆக்கியதல்லாமல் கல்கத்தா சங்கத்தின் செயலாளர் எழுதிய முதல் கடிதத்திலே சம்மே ளனம் அமைப்பதுதான் மாநாட்டின் குறிக்கோள் என்பதை திட்டமாக அறிவித்திருப்பதை அறிந்து, மாநாட்டில் கலந்து கொள்வதாக அறி வித்துவிட்டு பின் என்ன காரணத்தாலோ பின்வாங்கி யிருக்கிறது

என்பதை எடுத்து விவரித்த பின்னர் பொருள் ஆலோசனைக் குழு அனைத்தையும் ஆராய்ந்து மாநாட்டின் தீர்மானத்தை உருவாக்கியது.

14ந் தேதி நடைபெற்ற மாநாட்டில் பிரரேபிக்கப்பட்டு முறைப்படி ஆமோதிக்கப்பட்ட தீர்மானம் பின்வருமாறு:

அகில இந்திய தமிழ் எழுத்தாளர் சம்மேளனம் அமைப்பதுபற்றி இம் மாநாட்டு அமைப்பாளர்கள் பல பிராந்தியங்களில் இயங்கி வரும் பல்வேறு தமிழ் எழுத்தாளர் சங்கங்களுக்கு அனுப்பிய சுற்றறிக்கைக்கு வந்த பதில்கள் அனைத்தும் இம் மாநாட்டின் முன் வைக்கப் பெற்றன. கீழ்க்கண்ட எழுத்தாளர் சங்கங்கள் அகில இந்திய தமிழ் எழுத்தாளர் சம்மேளனம் அமைப்பதை வரவேற்று, தமது ஆதரவை தெரிவித்துள்ளதை இம் மாநாடு நன்றியுடன் ஏற்றுக்கொள்ளுகிறது.

1. தமிழ் எழுத்தாளர் சங்கம், கல்கத்தா.
2. மதுரைத் தமிழ் எழுத்தாளர் சங்கம், மதுரை.
3. கரூர் தமிழ் எழுத்தாளர் சங்கம், கரூர்.
4. திருச்சித் தமிழ் எழுத்தாளர் சங்கம், திருச்சி.
5. பம்பாய் தமிழ் எழுத்தாளர் சங்கம்.
6. குழந்தை தமிழ் எழுத்தாளர் சங்கம், நாகர்கோவில்.
7. சென்னை கம்பர் தமிழ் எழுத்தாளர் மன்றம், சென்னை.
8. தென் ஆற்காடு தமிழ் எழுத்தாளர் சங்கம், கடலூர்.
9. வட ஆற்காடு தமிழ் எழுத்தாளர் சங்கம், திருவண்ணாமலை.
10. அகில இந்திய தமிழ் எழுத்தாளர் சங்கம், சென்னை,

சென்னைத் தமிழ் எழுத்தாளர் சங்கச் செயலாளர் இம் மாநாட்டுப் பொதுச் செயலாளருக்கு மேற்படி சுற்றறிக்கை சம்பந்தமாக அனுப்பியுள்ள 6—11—60 தேதியிட்ட கடிதமும், 5—11—60 தேதியன்று சென்னைத் தமிழ் எழுத்தாளர் சங்கச் செயற்குழு நிறைவேற்றியதாகச் சொல்லப்பெறும் தீர்மானத்தின் நகலும் (இது மேற்படி சங்கச் செயலாளரால் அனுப்பப்பெற்றது) இம்மகாநாட்டின் முன் வைக்கப் பெற்றன.

அகில இந்திய தமிழ் எழுத்தாளர் சம்மேளனம் ஒன்று அமைத்தல் வேண்டுமென, சென்னை தமிழ் எழுத்தாளர் சங்கப்பேரவையின் விசேஷக் கூட்டம் தீர்மானித்திருப்பதை இம்மகாநாடு இந்தச் சந்தர்ப்பத்தில் நினைவு கூர்கிறது. ஆகவே, சென்னைத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் செயற்குழு இப்போது 5—11—60ல் செய்திருப்பதாகச் சொல்லப்பெறும் தீர்மானம், அச்சங்கத்தின் பேரவை வகுத்துள்ள கொள்கைக்கும், ஏற்றுக்கொண்டுள்ள திட்டத்திற்கும் முரணாக அமைந்துள்ளது என இம்மாநாடு கருதுகிறது.

ஆகவே, பெருவாரியான தமிழ் எழுத்தாளர் சங்கங்களும், தமிழ் எழுத்தாளர்களும் பல இடங்களில் கடந்த நான்கு ஆண்டுகளில் நடைபெற்றுள்ள தமிழ் எழுத்தாளர் மாநாடுகளும் அகில இந்திய தமிழ் எழுத்தாளர் சம்மேளனம் அமைப்பதைப் பூரணமாக ஆதரிப்பதாகவே இம்மாநாடு கருதுகிறது.

இந்நிலையில் தமிழ் எழுத்தாளர் பெரும்பாலோரும் சென்னை தமிழ் எழுத்தாளர் சங்கம் உள்பட தமிழ் எழுத்தாளர் சங்கங்கள் அனைத்தும் அகில இந்திய தமிழ் எழுத்தாளர் சம்மேளனம் நிறுவ வேண்டும் என்று கொண்டுள்ள விருப்பத்தை நிறைவேற்றுவதே தன்னுடைய பொறுப்பும் கடமையும் என்று இம்மாநாடு தீர்மானிக்கிறது.

2. அகில இந்திய தமிழ் எழுத்தாளர் சம்மேளனம் பற்றிய அமைப்பு விதிகளை விஷயாலோசனைக் குழு வகுத்ததற்காக மேற்படி குழுவுக்கு இம்மாநாடு நன்றி செலுத்தி அவ்விதிகளை ஏகமனதாக ஏற்றுக் கொள்ளுகிறது.

3. சம்மேளனத்தைப் பதிவு செய்யவும், ஆங்காங்குள்ள சங்கங்களைச் சம்மேளனத்துடன் இணைக்கவும், சங்கங்கள் இல்லாத இடங்களில் சங்கங்களை அமைக்கவும் கீழ்க்கண்டவர்களைச் சம்மேளனத்தின் செயலாளர் முதல்வர், செயலாளர்கள் ஆகிய பதவிகளுக்கு இம் மாநாடு நியமிக்கிறது.

திரு. கொடுமுடி ராஜகோபாலன், செயலாளர் முதல்வர்.

திரு. அ. வெ. ர. கிருஷ்ணசாமி ரெட்டியார், செயலாளர்.

திரு. ப. ந. தியாகராஜன், செயலாளர்.

இவர்கள் சம்மேளனத்தின் விதிகளின்படி அமைய இருக்கும் முதல் செயற்குழுவில் அங்கம் வகிக்கவும், சம்மேளனத்தின் செயலாளர்களாக மூன்று ஆண்டுகளுக்குப் பணியாற்றவும் இவர்களுக்குச் சம்மேளன விதிகளின்படி இம் மாநாடு பூரண உரிமை வழங்குகிறது.

4. ஒரு செயலாளர் முதல்வர். இரு செயலாளர்கள் அடங்கிய இக் குழுவுக்கு மூன்ருவது செயலாளர் ஒருவரை நியமிப்பதற்கும். எக்காரணம் பற்றியாவது செயலாளர் முதல்வர் தமது பதவியிலிருந்து விலகிக் கொண்டால் அல்லது செயலாளராக மட்டும் இருப்பதற்கு விரும்பினுல் ஒரு செயலாளர் முதல்வரை குழுவிலிருந்து நியமிப்பதற்கும், விலகும் செயலாளர் முதல்வர் செயலாளராக மட்டும் பணியாற்றுவதற்கு அனுமதிப்பதற்கும் இம் மாநாடு இக்குழுவுக்குப் பூரண அதிகாரம் அளிக்கிறது.

5. ஏற்றுக்கொள்ளப்பட்ட சம்மேளன விதிகளின்படி சம்மேளனத்தின் முதல் செயற்குழுவில் அங்கம் வகிக்க ஒரு தலைவர், துணைத் தலைவர்கள். ஒரு பொருளாளர் செயற்குழு உறுப்பினர்கள் ஆகியோரை நியமித்துப் பூரணத்வம் வாய்ந்த முதல் செயற்குழுவை அமைக்க மேற்குறிப்பிட்ட செயலாளர் முதல்வர். செயலாளர்கள் ஆகியோருக்கு இம் மாநாடு பூரண அதிகாரம் அளிக்கிறது.

6. 1961 ஜனவரி 31-ம் தேதிக்குள்ளாகச் சம்மேளனத்தின் செயற்குழு வொன்றை அமைப்பதற்கான ஏற்பாட்டையும், சம்மேளனத்தின் ஆரம்ப விழாவை நடத்துவதற்கான ஏற்பாடுகளையும் செய்ய மேற்படி சம்மேளனத்தின் செயலாளர்களுக்கு இம் மாநாடு அதிகாரம் அளிக்கிறது.

7. அடுத்த அகில இந்திய தமிழ் எழுத்தாளர் மாநாட்டை நடத்தும் பொறுப்பை அகில இந்திய தமிழ் எழுத்தாளர் சம்மேளனத்திற்கு இம் மாநாடு அளிக்கிறது.

எனவே இப்பொழுதும் காலம் தாழ்ந்துவிடவில்லை. அனைவரது ஆதரவையும் பெறுவதற்காகவே காலத்தை நீடித்து தீர்மானத்தை உருவாக்கியிருக்கிறேம். சென்னையில் இருக்கும் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் செயற்குழு தனது 5—11—60-ம் தேதிய தீர்மானத்தை மீண்டும் ஆலோசனை செய்து முடிவை மாற்றிக்கொள்ளத் தடையாக

இருப்பது எதுவுமில்லை. பேரவை தீர்மானத்தை ஒட்டி, சங்க மாநாட்டின் கட்டளைப்படி தனது முடிவை மாற்றி, அனைத்திந்திய தமிழ் எழுத்தாளர் பெரு மன்றத்துடன் இணைந்து பணியாற்றினால் சென்னை சங்கத்தின் புகழும் சிறப்பும் மேலும் பிரகாசிக்கவே செய்யும் என உறுதி கூறி அன்புக் கரம் கூப்பி அழைக்கிறோம்.

இங்ஙனம்

செயலாளர்கள்,

அனைத்திந்தியத் தமிழ் எழுத்தாளர் பெருமன்றம்,

சென்னை.

## அனைத்திந்தியத் தமிழ் எழுத்தாளர் பெருமன்றம்

தேதி : 29—12—'60.

செயலாளர்
தமிழ் எழுத்தாளர் சங்கம்
சென்னை.

அன்புடையீர்,

வணக்கம்பல.

பாரத நாட்டின் பல பகுதிகளில் ஆங்காங்கு செயல்பட்டு வரும் தமிழ் எழுத்தாளர் சங்கங்களையும், சங்கங்களில் சேராத தமிழ் எழுத்தாளர்களையும் இணைத்து அனைத்திந்தியத் தமிழ் எழுத்தாளர் பெரு மன்றத்தை, அண்மையில் கல்கத்தாவில் கூடிய அகில இந்திய தமிழ் எழுத்தாளர் மாநாடு தொடங்கியிருக்கும் செய்தி தாங்களறிவீர்கள். பெரும்பாலான தமிழ் எழுத்தாளர் சங்கங்களும், எழுத்தாளர்களும் பெருமன்றம் ஆரம்பிப்பதை ஆதரித்தும், ஒத்துழைக்க, சம்மதம் தெரிவித்தும் தீர்மானங்கள் செய்திருக்கின்றன.

தங்கள் சங்கமும் பெருமன்றத்துடன் இணைந்து, ஒத்துழைக்க வேண்டுமென்று நாங்கள் தங்களை பணிவன்புடன் வேண்டுகிறோம். தங்கள் சங்கத்தின் செயற்குழுவைக் கூட்டி பெருமன்றத்துடன் இணைந்து பணியாற்ற ஆதரவாக ஒரு தீர்மானம் இயற்றி முடிவை பெருமன்றத்திற்குத் தெரியப்படுத்துமாறு தங்களை வேண்டுகிறோம். தங்கள் சங்க உறுப்பினர் முகவரி பட்டியல் ஒன்றும் உடன் அனுப்பித்தர வேண்டுகிறோம்.

தங்கள் ஒத்துழைப்பையும், உறுதுணையையும் என்றும் வேண்டும்.

தங்களன்புள்ள

அ. வெ. ர. கிருஷ்ணசாமி

செயலாளர்.

## அனைத்திந்தியத் தமிழ் எழுத்தாளர் பெருமன்றம்

தேதி : 24—1—1961

பொதுச் செயலாளர்,
தமிழ் எழுத்தாளர் சங்கம்,
சென்னை.

அன்புடையீர்,

வணக்கம் பல. 7—1—61 தேதியிட்ட தங்களின் கடிதமும், 6—1—61 தேதியன்று சென்னைத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின்

செயற்குழு செய்த தீர்மானத்தின் நகலும் கிடைத்தது. அனைத்திந்தியத் தமிழ் எழுத்தாளர் பெருமன்றத்துடன் சென்னைத் தமிழ் எழுத்தாளர் சங்கமும் இணையுமாறு வேண்டுகோள் விடுத்து அழைத்த என்னுடைய 29-12-60 தேதிய அழைப்பை, செயற்குழுவின் முன் வைத்து, அதன் கருத்தை எனக்கு அறிவித்த தங்களுக்கு என் உளமார்ந்த நன்றியும் வணக்கமும் உரியது.

தாங்கள் எனக்கு அறிவித்திருக்கும் செயற்குழு தீர்மானத்தின் முழு வடிவம் இது: "சென்னையில் உள்ள தமிழ் எழுத்தாளர் சங்கம் உலகத்தில் உள்ள தமிழ் எழுத்தாளர்களையும், எழுத்தாளர் சங்கங்களையும் உள்ளடக்கிப் பலகாலமாக ஒரு மைய நிறுவனமாக இயங்கி வருகிறது. எல்லாத் தமிழ் எழுத்தாளர்களையும் ஒன்று திரட்டி ஒரே அமைப்பில் அவர்களை இருக்கச் செய்து இலக்கியத்துக்கும், எழுத்தாளர்களுக்கும் தொண்டு புரிந்து வரும் பெருமை இதனையே சாரும். இந்தச் சங்கமே ஒரு கூட்டமைப்பாக பரிணமிப்பதே இயற்கையும் பொருத்தமுமாகும். இதற்கான முயற்சிகள் ஏற்கனவே மேற்கொளளப்பட்டு அதற்குரிய ஒரு குழுவில் தாங்களும் இடம் பெற்றிருக்கிறீர்கள். இக்குழு ஓரளவு செயற்பட்டதும் தாங்கள் அறியாததல்ல. இதுபற்றி எம் முயற்சி மறுபடியும் துவக்கப்பட்டாலும் அது தாய்ச் சங்கத்தின் மூலமாக தொழிற்படுவதே முறையானதாகும். தமிழ் எழுத்தாளர் நலனில் அக்கரையுள்ளவர்கள் தாய்ச் சங்கத்தோடு இணைந்து, அதனையே ஒரு பேரமைப்பாகப் பொலியச் செய்யும்படி செயற்குழு வேண்டிக் கேட்டுக்கொள்ளுகிறது."

பத்திரிகைகளுக்கு செயற்குழுவின் தீர்மானத்தை தாங்கள் அறிவித்திருப்பதில் காணப்படும் வாசகம் பின்வருமாறு இருக்கிறது. "பழமையான நம் தாய்ச் சங்கம் ஏற்கனவே சில சங்கங்களைத் தன் இணைப்பாகக் கொண்டுள்ளது. உலகின் பல பாகங்களில் இதற்கு உறுப்பினர்கள் உள்ளனர். ஏனைய சங்கங்களை நம்மோடு இணைத்துக் கொள்வதற்குரிய நடவடிக்கைகளை துரிதமாக எடுக்குமாறு மூவர் கொண்ட குழு ஒன்றினை 1959லேயே நம் பேரவை ஏற்படுத்தியுள்ளது. அவ்வுட்குழு உறுப்பினரில் ஒருவரான திரு. அ. வெ. ர. கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்களிடமிருந்து "அகில இந்தியத் தமிழ் எழுத்தாளர் பெருமன்றத்தில் வந்து இணையுமாறு" நம்மை அழைத்து கடிதம் வந்திருப்பது கண்டு இச் செயற்குழு வருந்துகிறது. ஏனைய சங்கங்களை இணைத்துச் சேர்த்துத் தாய்ச் சங்கமாக இயங்க வல்ல உரிமையும் கடமையும் உலகச் சங்கமாகிய நம் சங்கத்திற்கே உண்டு. இந்த ஆண்டில் அதற்குரிய செயல்களை விரைந்து எடுக்குமாறு நம் சங்கத்தை இச் செயற்குழு தூண்டி வேண்டுகிறது. தாய்ச்சங்கமான நம் சங்கத்தில் மீண்டும் தொடர்பு கொண்டு நம் முயற்சிகளுக்கு ஊக்கமும் ஆக்கமும் தருமாறு ரெட்டியார் அவர்களை விரும்பி வேண்டுகிறது. இம் முயற்சியில் நம்முடன் ஒத்துழைக்குமாறு எழுத்தாளர் அனைவரையும் அன்புடன் வேண்டிக் கொள்ளுகிறோம்" என்பது காணப்படுகிறது. எனக்கு அனுப்பப்பட்ட தீர்மானத்தின் வாசகமும் பத்திரிகையில் வெளிவந்த தீர்மானத்தின் வாசகமும் மாறுபடுகின்றன. கருத்தில் சற்று ஒத்திருந்தாலும் அடிப்படையில் வேற்றுமை இருக்கவே செய்கிறது.

6—1—61 தேதி சென்னைத் தமிழ் எழுத்தாளர் சங்கச் செயற்குழு செய்த தீர்மானத்தின் வாசகம், கடிதத்தில் கண்ட வாசகமா? அல்லது பத்திரிகையில் வெளிவந்திருப்பதா? என்பதை சிந்திக்கவேண்டியிருக்கிறது. எனக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் கண்ட வாசகம்தான்

தீர்மானத்தின் வடிவம் என்றால், கல்கத்தா மாநாட்டுப் பொதுச் செயலாளருக்காக சென்னைச் சங்கத்தின் செயற்குழு 5--11—60 தேதி கூடி முடிவு செய்து அனுப்பி வைத்த முட்டுக்கட்டைத் தீர்மானத்திற்கு ஆதரவாக 5—1—61 தேதிய செயற்குழு தீர்மானம இரட்டைத்தாழ்ப்பாள் போட்டுவிட்டது என்று மதித்து இனி சென்னையிலிருக்கும் தமிழ் எழுத்தாளர் சங்கத்தை வற்புறுத்த வேண்டாம் அவர்களாக விரும்பி வரும்போது கதவடைத்துவிடாமல் வரவேற்க காலத்தை எதிர்பார்த்துக் காத்திருப்போம என்று நண்பர்களுக்கு எடுத்துக் கூறிவிட்டு விட்டிருப்பேன்.

பத்திரிகைகளில் வெளிவந்த அறிக்கை எனக்கு உரிய கௌரவம் வைத்து உயர்ந்த முறையில் தயாரிக்கப்பட்ட வாசகமாகயிருந்தாலும் உண்மைக்கு மாறாக இருக்கின்ற காரணத்தால் என் நிலையை விளக்கி எழுத்தாளர்களுக்கு அறிவிக்கவும் ஏன் தங்களுக்குக்கூட மறந்து போனதை ஞாபகமூட்டவேண்டிய நிர்ப்பந்தத்தில் என்னை வைத்துவிட்டது. அனைத்திந்தியத் தமிழ் எழுத்தாளர் பெருமன்றம் சென்னைத் தமிழ் எழுத்தாளர் சங்கத்திற்கு எதிராகவோ, பிரதியாகவோ ஆரம்பிக்கப்பட்டுள்ளதோ என்று பத்திரிகை வாசகர்களும் எழுத்தாளர்களும் நினைக்கும்படி மறைமுகமான தூண்டுதல் அதிலிருக்கிறது. எனவே உள்ள நிலையை எழுத்தாளர்கள், வாசகர்கள், புதிய தலைவர், புதிதாக எழுத்தாளர் சங்கத்தில் வந்து சேர்ந்திருக்கும் உறுப்பினர்கள், முன் நடந்ததை இன்று மறந்துபோய்விட்ட எனது நண்பர்கள் அனைவரது சிந்தனைக்கு வைத்துவிடவேண்டிய கடமை உணர்ச்சி என்னை வற்புறுத்துகிறது.

பத்திரிகையில் வெளியாகி இருக்கும் வாசகத்தில் கண்ட 1959-ல் பேரவையில் நியமிக்கப்பட்ட மூவர்கமிட்டியில் நான் அங்கம் வகிப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது தவறானதாகும். 14—10—59 தேதியன்று சென்னை சங்கத்தின் செயற்குழு நியமித்த மூவர் குழுவில், திரு. சிவபாதசுந்தரம், திரு. வ. விஜயபாஸ்கரன், திரு. அ. வைத்தியநாதன் ஆகியோர்கள் தான் இடம் பெற்றிருக்கிறார்கள். 21-9-58-ல் பேரவைக் கூட்ட முடிவின்படி செயற்குழு அமைத்த உட்குழுவில், அ. வெ. ர. கிருஷ்ணசாமி ரெட்டியார், திரு. ஏ. ஜி. வெங்கடாச்சாரி, திரு. சாமிசிதம்பரனார், திரு. ப. ஜீவானந்தம், திரு. எம். பி. சுப்ரமண்யம், திரு. விஜயபாஸ்கரன் ஆகிய அறுவர் இடம் பெற்றிருக்கிறார்கள். தாங்கள் பத்திரிகைகளில் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்ட மூவர் கொண்ட குழு, ஆள் மாறாட்டம் மட்டுமல்ல, காலம், கருத்தும் மாறாட்டமானதாகும்.

“ஏற்கனவே சில சங்கங்களை இச்சங்கம் இணைப்பாகக் கொண்டுள்ளது” என்ற வாசகம் சரியானதல்ல. உண்மையல்ல. 12-2-58-ல் சென்னைச் சங்கத்தின் செயற்குழு கன்னியாகுமரி மாவட்டத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தை கிளைச்சங்கமாக அங்கீகரித்து ஒரு தீர்மானம் செய்தது. அதே வருடம் 21-9-58 தேதி கூடிய பேரவைக் கூட்டத்தில் கன்னியாகுமரி மாவட்டத் தமிழ் எழுத்தாளர் சங்கம், சென்னைச் சங்கத்திலிருந்து விலகிக்கொண்டதாக எழுதிய கடிதம் படிக்கப்பட்டது. பேரவையில் சம்மேளனத் தீர்மானத்தை நான் முன் மொழிந்ததும் அதனை வழிமொழிந்தவர் கன்னியாகுமரி மாவட்டத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் பிரதிநிதியாக நியமிக்கப்பெற்ற சென்னைக்கு வந்திருந்த திரு. டானியல் எம். எல். எ., ஆகும். அந்தத் தேதிக்குப்பிறகு சென்னை சங்கத்தோடு எந்த ஒரு எழுத்தாளர் சங்கமும் இணைந்துவிட்டதாகவோ, உள்ளடக்கப்பட்டதாகவோ இன்று வரை அதிகாரபூர்வ

மாக அறிவிக்கப்படவுமில்லை. இன்று வரை உள்ள சங்கத்தின் ஆதாரங்களில் காணப்படவும் இல்லை என்பதை வினயமாகத் தங்களுக்கு எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

1951ல் ஆரம்பிக்கப்பட்டு 7—2—52ல் சட்டப்படி பதிவு செய்யப்பெற்று இன்றுவரையில் நடைமுறையில் இருந்து வரும் சென்னைத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் அமைப்பு விதிகளில் (3)வது விதி இன்றுள்ள சென்னை சங்கத்தின் அதிகார எல்லையை குறிப்பதாக உள்ளது கூறுவது இது "**இச் சங்கத்தின் நடவடிக்கைகள் சென்னை ராஜ்யம் முழுவதிலும் வியாபித்து நிற்கும்.** சென்னை ராஜ்யத்திற்கு வெளியிலும் தமிழ் எழுத்தாளர் நலனையும் உரிமையையும் பாதுகாக்கும் அளவுக்கு சங்கத்தின் நடவடிக்கைகள் விஸ்தரிக்கும்" என்று திட்டவட்டமாகக் கூறுகிறது. விதி 22: இச் சங்கத்திற்குக் கிளைச் சங்கங்கள் அமைக்கப்படலாம். மற்றும் இச்சங்கத்தின கொள்கைகளுக்கும், நோக்கங்களுக்கும் இணைந்த நோக்கம் உடையனவும், இதன் வேலை திட்டத்தை நிறைவேற்றி வைக்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்பவையும் ஆகிய சங்கங்கள் இச் சங்கத்தோடு இணைக்கப் பெறுவதற்குத் தகுதியுள்ளன. விதி (23) அவ்வாறு கிளைச் சங்கங்களும் இணைப்புச் சங்கங்களும் அமைக்கப்படுவதற் குரிய விதிகளையும் நிபந்தனைகளையும் செயற்குழு அப்போதைக் கப்போது நிர்ணயிக்கும் உரிமை வாய்ந்ததாகும் என்று விதிகள் வகுக்கப்பட்டிருந்தாலும் செயலில் எதுவும் செய்யப்படவில்லை என்பதைத்தான் 19—1—58ல் பேரவைக் கூட்டத்தில் சங்கத் தலைவர் திரு. சாமிநாத சர்மா அவர்களின் பேருரையும், 21—9—58தேதிய பேரவைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட சம்மேளனத் தீர்மானமும், அறுவர் குழு அமைப்பும், 2—8—59ல் நடைபெற்ற மாநாட்டுத் தீர்மானம் 10ம் எடுத்துக் காட்டுவதைத் தாங்கள் சற்று நிதானமாக படித்துப் பார்த்தால் தெரியவரும்.

மேலும் தாங்கள் எடுத்துக் காட்டிய மூவர் கொண்ட குழு சென்னைத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தை, தமிழ் எழுத்தாளர் சங்கம் என்று பெயர் மாற்றியதை அறிந்த கம்பெனிகள் சட்டப் பதிவாளர் சென்னை சங்கத்தின் நிர்வாகிகளுக்கு "சங்கத்தின் பெயர் மாற்றம் சட்டப்படி முன் அறிவிப்பு இல்லாமலும், முறைப்படி செய்யவேண்டியவைகளைச் செய்யாமலும் நிகழ்ந்திருப்பதால் சங்கத்தின் நிர்வாகிகள் மீது ஏன் நடவடிக்கை எடுத்துக் கொள்ளக்கூடாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு விடுத்த எச்சரிக்கைக்குச் சமாதானம் கூற, பெயர் மாற்றத்தை முறைப்படி மாற்றி அமுலில் இருக்கும்படி செய்விக்க, அதிகார எல்லையை விஸ்தரித்து ரெஜிஸ்டாருக்கு அனுப்பி வைக்கவேண்டிய நிர்பந்தம் காரணமாக அமைக்கப்பட்ட உட்குழுவாகும். இந்த உட்குழு தயாரித்த நோக்கங்களும், விதிகளும் 15-11-59 தேதி கூடிய பேரவைக் கூட்டத்தில் வைக்கப்பெற்றது. துணைத்தலைவர் திரு. மயிலை சீனி. வேங்கடசாமி அவர்கள் தலைமை வகித்தார்கள். தீர்மானத்தின் அவசியத்தையும, அவசரத்தையும், கருத்தையும் மனிதிற் கொள்ளாது விதிகளின் சொற்களின் மீதும், சொற்களில் அமைந்த எழுத்துக்களின் மீதும விவாதம் தொடங்கி, கூச்சலும் குழப்பமும் தோன்ற கூட்டத்தை, நடத்த முடியாமல் தலைவர், கூட்டத்தை ஒத்தி வைத்ததும் தாங்கள் அறியாத தல்ல.

மூவர் குழு மாற்றம் செய்து 15—11—59 பேரவைக் கூட்டத்தில் அறிமுகம் செய்து வைக்கப்பட்ட விதிகள் சங்கத்தின் அதிகார எல்லையை குறிப்பிடுவதாகவும் இணைப்புச் சங்கங்கள், கிளைச் சங்கங்கள் பற்றியதாகவும் உள்ள விதிகளை மட்டும் தங்கள் முன்பு வைக்கிறேன்.

விதி (3) அதிகாரம் இச் சங்கத்தின் நடவடிக்கைகள் பாரத நாடு முழுவதிலும் வியாபித்து நிற்கும் (இப்பொழுது அமுலில் இருக்கும் விதி சென்னை ராஜ்யம் முழுவதிலும் வியாபித்து நிற்கும் என்பதிலிருந்து திருத்தப்பட்டு நிறைவேறாமல் போன விதி சற்று விரிவாக்கப்பட்டிருந்தது) பாரத நாட்டிற்கும் வெளியிலும் தமிழ் எழுத்தாளர் நலனையும், உரிமையையும் பாதுகாக்கும்'' என்று மாற்றியிருந்தார்கள்.

விதிகளில் ஒன்றும் தெளிவாக இல்லாவிட்டாலும் தேர்ந்தெடுக்கப்படும் தலைவரின் கருணையால் அகில உலகத்தில் பரவிக் கிடக்கும் தமிழ் எழுத்தாளர் சங்க உறுப்பினர்களின் சார்பாக வடதிசைக்கொருவரும், தென்திசைக் கொருவரும் ஆக இருவர் சென்னையில் இருக்கும் தமிழ் எழுத்தாளர் சங்கத்தில் வெளியூர் வாசிகள் செயற்குழுவில் இடம் பெற்றுவரும் துர்பாக்கிய நிலையைக் கண்டு மனமிறங்கி விதி (16) இ-யில் வெளியூர் அங்கத்தினர்கள் இப்பொழுதிருந்து வரும் இருவருக்குப் பதில் அறுவர் இருக்கலாம்'' என்று மாற்றியிருந்தார்கள். இணைப்புச் சங்கங்கள்பற்றிய விதி (35) அ. இச் சங்கத்தின் யாதாஸ்தில் கண்ட கொள்கைகளையும் நோக்கங்களையும் ஏற்று இதன் அமைப்பு விதிகளை எவ்வித மாறுதலுமின்றி அங்கீகரிக்கும் மற்ற சங்கங்கள் பாரத நாட்டில் எங்கிருந்தாலும் இச்சங்கத்தோடு இணைக்கப் பெறுவதற்குத் தகுதியுடையன. (ஆ) இச்சங்கத்தின் தலைவரே இணைக்கப் பெறும் சங்கங்களுக்கும் தலைவராக இருப்பார். இணைப்புச் சங்கங்கள் தமக்கென மற்றையநிர்வாகிகளைத் தேர்ந்தெடுத்துக் கொள்வர். (இ) இணைப்புச் சங்கஉறுப்பினரின் பிரவேசக் கட்டணமும், ஆண்டு சந்தாவில் பாதியும் இச்சங்கத்தைச் சாரும்.

இவ்வாறு மூவர் குழு திருத்தம் செய்து அறிமுகப்படுத்திய விதிகளும் 15—11—59 தேதிய கூட்டத்தில் உருவாகாமல் போய்விட்டது. சென்னை சங்கம் ஆரம்பிக்கப்பட்ட தேதியிலிருந்து இன்று வரை எந்த ஒரு தமிழ் எழுத்தாளர் சங்கத்தையும் தன்னுடன் இணையுமாறு, கிளைச் சங்கமாக் விளங்குமாறு அதிகார பூர்வமாக ஒரு அழைப்புக்கூட விட்டதில்லை என்று நான் சொன்னால் ஆச்சரியப்பட்டு விடாதீர்கள். இந்த நிலையில் "சில சங்கங்களை உள்ளடக்கி பலகாலமாக மைய நிறுவனமாக இயங்கி வருகிறது இச்சங்கம்'' என்று சொல்வது சரியாகுமா? அடுக்குமா? சிந்தித்துப் பாருங்கள்.

தாய்ச்சங்கமாக சென்னைத் தமிழ் எழுத்தாளர் சங்கம் விளங்குவதாகத் தாங்கள் எடுத்துக்காட்டி யிருக்கிறீர்கள். என்றும் "தனி மரம் தோப்பு ஆவதில்லை'' "வீரரைப் பெறாத மேன்மைதீர் மங்கையை ஊரவர் மலடி என்றுரைத்திடும்'' மரபு தமிழ் மரபு. சென்னைச் சங்கத்தைத் தாய்ச்சங்கம் என்று சொல்லுவதால், மற்றவர்களுக்கு எவ்வித மானநஷ்டமோ, பாதகமோ இல்லை என்பதால் மற்றவர்களும் சரி, நானும் ஆட்சேபணை செய்யவில்லை என்பதைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். சென்ற வருடம் அக்டோபர் மாதம் சென்னையில் நடைபெற்ற மாநாட்டின் சிறப்பு மலரான பாரதியில், தாங்கள் ஆசிரியராக இருக்கும் அந்த ஏட்டில், பக்கம் 49, 50, 51, ஆகிய பக்கங்களில் மைவண்ணன் என்பார் தமிழ் எழுத்தாளர் சங்கம் தோன்றிய வரலாறு பற்றி எழுதியிருக்கும் கட்டுரையில், முதல் தமிழ் எழுத்தாளர் மாநாடு கோவையில் 4—11—44-ல் நடைபெற்றிருக்கிறது என்பதும், அந்த மாநாட்டில் தலைமை வகித்த திரு. டி. எஸ். சொக்கலிங்கம் அவர்களே முதல் தமிழ் எழுத்தாளர் சங்கத்திற்கு முதல் தலைவராக விளங்கிய வரலாறும், அதற்கடுத்த ஆண்டு திரு. பெ. தூரன் அவர்களும், அடுத்த ஆண்டு திரு. நாரண துரைக்கண்ணன் அவர்களும்

முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டுச் சிறப்பாக செயல்பட்டு வந்த வரலாறும் காணலாம். தாய்ச்சங்கமாக விளங்க முதல் முதலில் ஆரம்பிக்கப்பட்ட சங்கத்திற்குத்தான் உரிமை உண்டு என்ருல் அதுவும் இன்று இருக்கும் சென்னைச் சங்கத்திற்கு அந்த உரிமையும் இல்லை. சென்னைச் சங்கம் தோன்றுவதற்கு முன்பே ஒரு சங்கம் தோன்றி, முறைப்படி செயல்பட்டு, தமிழ் எழுத்தாளர்களை ஒன்றுதிரட்டி பணி புரிந்து வந்திருக்கிறது என்பதை தங்களுக்கு ஞாபகமூட்ட விரும்புகிறேன். முதல் மாநாடு சிறப்பாக நடைபெற, எழுத்தாளர் சங்கம் இருக்கவேண்டுமென்று கருதித் திட்டமிட்டுழைத்த ஒரு சிலரில் அடியேனும் ஒருவன் என்பதையும் தெரிவித்துவிடுகிறேன். அந்த மாநாட்டில் தான் பாரதி பாடல் அடகில் கிடக்கிறது, அதனை விடுவிக்க வேண்டும் என்று அடியேன் தீர்மானம் கொண்டுவந்து பேசினேன் என்பதும் ஞாபகக் குறிப்புக்காக எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

தாய்ச்சங்கம் உரிமை கொண்டாடும் தாங்கள் தங்களுக்கு முன்னர் இந்தச் சங்கத்தில் இருந்த நிர்வாகிகள் செய்த தீர்மானங்களுக்கும், முடிவுகளுக்கும் உரிய மரியாதை கொடுத்துப் பார்த்ததில்லை. தீர்மானங்களை மதித்ததில்லை, நிறைவேற்றி வைக்கவேண்டுமென்ற தாபம் கொண்டதில்லை. கடமையை மறந்து உரிமை மட்டும் கொண்டாடுகிறீர்கள். உங்களை மதித்து நடக்கும்படி எங்களை வற்புறுத்துகிறீர்கள். தமிழ் எழுத்தாளர் நலனில் அக்கரை உள்ளவன் என்ற முறையில் தங்களை உரிய கௌரவத்தோடு மதிக்கிறேன். அதனுல்தான் அன்புடன் ஒன்றுபட்டு வருக வருக என்று வணங்கிக் கேட்டுக்கொள்கிறேன்.

சென்னைச் சங்கத்தின் பேரவைக் கூட்டம் 21—9—58ல் செய்த தீர்மானம், 1959 ஆகஸ்ட் 2ந் தேதி மாநாடு தீர்மானித்த 10வது தீர்மானம் ஆகியவை பற்றி சென்னைச் சங்கத்தின் செயற்குழு எவ்வித நடவடிக்கையும், முயற்சியும் எடுத்துக் கொள்ளாமல் இருப்பதைப் பார்த்தபின், சம்மேளன முயற்சியில் என்னுடன் ஆரம்ப முதல் ஒத்துழைத்து வந்த கல்கத்தா தமிழ் எழுத்தாளர் சங்கச் செயலாளரான திரு. ப. ந. தியாகராஜன் அவர்களை அகில இந்திய அடிப்படையில் தமிழ் எழுத்தாளர் மாநாடு கூட்டும்படியும், சம்மேளனம அமைப்பது ஒன்றுதான் மாநாட்டின் முக்கிய நோக்கம் என்பது பற்றித் திட்டவட்டமாகத் தெளிவாக்கி விடுமாறும் கேட்டுக்கொண்டேன். சென்னைச் சங்கத்தின் உட்குழு தயாரித்த விதி முறைகள் என்னிடம் இருந்த பிரதி ஒன்றைக் கல்கத்தாவுக்கு அனுப்பி வைத்தேன். அதனை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து, சேர்க்கவேண்டியதைச் சேர்த்து, மாநாட்டின் நோக்கத்தை வலியுறுத்தி எல்லா எழுத்தாளர் சங்கங்களுக்கும் திரு. தியாகராஜன் அனுப்பி வைத்திருந்தார். தாங்களும், தலைவர், துணைத்தலைவர் அவர்களும் கல்கத்தாவுக்கு வருவதாக கடிதம் எழுதியதைக் கண்டு ஆனந்தப்பட்டேன். சம்மேளன முயற்சி சகல ஆதரவுடனும் நிறைவேறிவிடும் என்று நம்பி நானும், நண்பர்களும் கல்கத்தாவுக்குப் புறப்பட்டோம்.

கல்கத்தாவில் சென்னைச்சங்கத்தின் செயற்குழு தீர்மானத்தைக் கண்டு திடுக்கிட்டேன். விவரமெல்லாம் எடுத்துச் சொன்னேன். பல ஆயிரம் செலவிட்டு, பல நாள் உழைத்து, பலபேருடைய வசதியையும் சௌகரியத்தையும் கவனித்து கூட்டப்பெற்ற இம் மாநாட்டில் தங்கள் செயற் குழுவின் 5—11—60தேதிய தீர்மானம் ஒரு அதிர்ச்சியைக் கொடுத்தது. தங்களை விட்டுவிட்டுச் சம்மேளனத்தை உருவாக்குவது

சிரமமல்ல என்றாலும் தர்மமல்ல, முறையல்ல என்று கூடியிருந்த பிரதிநிதிகள் கருதினார்கள். ஒரு சமரச முடிவும் கண்டோம். விதிகளைப் பரிசோதித்து ஏற்றுக்கொள்வது, அமைய இருந்த ஆட்சிக் குழுவை அமைக்காமல் செயல்களை மேற்கொண்டு செய்யவும், தங்களுடன் தொடர்பு கொண்டு பேசிப் பார்த்து, சென்னைச் சங்கத்தின் சம்மேளன தீர்மானத்தை எடுத்துக் காட்டிச் சம்மதத்தைப் பெறவைப்பதற்கு இறுதியாக முயன்று பார்த்துவிட்டு 1961 ஜனவரி 31தேதிக்குள் பெருமன்றத்தின் ஆரம்ப விழாவை வைத்துவிட வேண்டுமென்று முடிவு செய்து செயலாளர் மூவரை மாநாடு நியமித்துத் தீர்மானம் செய்தது.

கல்கத்தாவிலிருந்து திரும்பியதும் 15—12—60 தேதிய 'எழுத்தாளன்' பத்திரிகையில் பக்கம் 16, 17, 18ல் எழுத்தாளர்களின் சிந்தனைக்கு என்ற மகுடமிட்டு முழு விவரமும் எடுத்துக்காட்டித் தங்களுக்கு ஒரு பகிரங்க அழைப்பு விடுத்தேன். பதில் இல்லை. அதனையே அச்சிட்டுத் தங்களுக்கு அனுப்பிவைத்தேன். பின்னர்தான் 29—12—60 தேதியிட்ட அழைப்பு பெருமன்றத்தின் சார்பில் அனுப்பிவைத்தேன். தங்களிடமிருந்து தீர்மானத்தின் நகலும், அதனை உட்கவிந்த கடிதமும் கிடைத்தது. படித்துப் பார்த்து வருத்தமும் துக்கமும் அடைந்தேன்.

பத்திரிகைகளில் வெளிவந்த அறிக்கையை 10—1—61தேதி பார்த்தேன். அறிக்கை கடிதத்தின் சாயலைப் பெற்றிருந்தாலும் 5—11—60 தேதிய செயற்குழுவின் தீர்மானத்தில் முடக்கிவைத்த கரத்தை சற்று தயக்கத்துடன் நீட்டுவதாக அமைந்திருக்கும் கருத்தைக் கண்டு மகிழ்ச்சி அடைந்தேன். அதற்காக நன்றியும் செலுத்துகிறேன்.

தமிழகத்தின் தலைநகரான சென்னையில் வீற்றிருக்கும் தமிழ் எழுத்தாளர் சங்கமாகச் சென்னைச் சங்கம் இருக்கின்ற ஒரே காரணத்தால், இது மத்திய அமைப்பாக விளங்குகிறதோ என்று கருதிய வெளியூர் எழுத்தாளர் பலர் சென்னைச் சங்கத்தில் உறுப்பினர்கள் ஆனார்கள். சென்னை நகரில் இருக்கும் எழுத்தாளர்களுக்கு மட்டுமே உரியது இவ்வமைப்பு என்று கண்டுகொண்டதும் சங்கத்தை விட்டு விலகிவிடுவதும் வழக்கமாக இருந்து வருகிறது. சென்ற நான்கு அல்லது ஐந்து வருட அங்கத்தினர்களின் பட்டியலைப் பார்த்தால் இவ்வுண்மை புலனாகும். என்னைப் பொருத்த வரையில் சம்மேளன முயற்சிக்கு ஆதரவு தேடியே சென்னைச் சங்கத்தின் உறுப்பினன் ஆனேன். பேரவையில் தீர்மானத்தைக் கொண்டுவந்தேன் மற்றெல்லா சங்கத்தின் ஆதரவைப் பெற்று வருமாறு கட்டளையிட்டார்கள். ஒவ்வொரு சங்கத்துடனும் தொடர்புகொண்டு ஆதரவுபெற்று வந்தேன். மாநாடுகள் கூட்டித் தீர்மானங்கள் நிறைவேற்ற ஏற்பாடுகள் செய்தேன். சென்னை மாநாட்டிலும் தீர்மானம் ஒருமுகமாக நிறைவேறியது. காத்திருந்தேன் என்றாவது ஒருநாள் சம்மேளனம் அமைக்கச் சென்னைச் சங்கம் முன்வரும் என்று எதிர்பார்த்தேன். மாநாடு கூட்டினால் வந்து கலந்து பொறுப்பை ஏற்றுக்கொள்ளட்டும் என்று நினைத்தேன். 5—11—60 தேதிய தீர்மானம் என் நம்பிக்கையைச் சிதற அடித்துவிட்டது. சென்னைச் சங்கத்திற்கு கட்டவேண்டிய சந்தாவைக் கட்டிப் புதுப்பித்துக் கொள்ளாமல் இருந்துவிட்டதற்குச் செயற்குழுவின் தீர்மானம் தான் காரணம்.

உலகத்தில் பல பாகங்களிலிருந்து தமிழ் எழுத்தாளர்கள் சென்னைச் சங்கத்தில் மட்டும்தான் அங்கம் வகிக்கிறார்கள் என்று முடிவு

கட்டிவிடாதீர்கள். திருச்சியில் இருக்கும் சங்கத்திலும் அங்கம் வகிக்கிறார்கள். உலக மெங்கிலும் அங்கத்தினர்கள் இருக்கிறார்கள் என்பதால் சென்னைச் சங்கத்தை உலகச் சங்கம் என்று தாங்கள் குறிப்பிடுவது கண்டு அதிசயித்தேன். தமிழ் மக்கள் உலக மெங்கிலும் பரவிக்கிடந்து வருகிறார்கள். எனவே தமிழ்நாட்டு எல்லை என்று உலகக் கோடியைச் சுட்டிக் காட்டினால் நம்மைப் பார்த்து அறிவுலகம் என்ன சொல்லும்?

1960ல் திருச்சியிலும், சென்னையிலும் எழுத்தாளர் மாநாடு நடைபெற்றது. சென்னையில் நடைபெற்ற மாநாட்டு நிகழ்ச்சி அத்தனையும், எழுத்தாளன் வெளியிட்டது. ஆனால், சிலம்புச் செல்வர், சென்னைச் சங்கத்தின் முன்னாட் தலைவர் திரு. ம. பொ. சி. தலைமையில் நடைபெற்ற மாநாட்டைப்பற்றி ஒரு சிறு குறிப்பாவது சங்கத்தின் அதிகார பூர்வமான ஏடாகிய பாரதியில் தாங்கள் வெளியிட்டதுண்டா? கல்கத்தா மாநாடு தங்களுக்குப் பிடித்தமில்லாமலே போகட்டும் அகில இந்திய அடிப்படையில் தொடங்கப்பட்ட முதல் முயற்சி அல்லவா? இதைப்பற்றித் தாங்கள் ஒரு செய்தி தந்ததுண்டா? இந்தச் சங்கங்களுக்கே உங்கள் திருநோக்கு இந்தமட்டில் இருக்கிறதென்றால் மற்ற சங்கங்களைப்பற்றித் தாங்கள் நினைத்துப்பார்க்க முயலுவீர்கள் என்று நான் எதைக் கொண்டு நம்புவது?

அகில உலகத் தமிழ் எழுத்தாளர் மகா சங்கம் என்று எழுத்தாளனில் நகைச்சுவையுடன ஒரு அறிவிப்பு சிலமாதங்கள் போட்டு வந்தேன். அதைப்பார்த்து உலகச் சங்கமாகச் சென்னைச் சங்கத்தை தாங்கள் சித்தரித்துக் கொள்வதில் எனக்கு எவ்வித வருத்தமுமில்லை. என் கற்பனையில் உதித்த ஒரு சங்கத்திற்கு வடிவு கொடுத்த உங்களுக்கு என் உளமார்ந்த நன்றியும் வணக்கமும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

முடிவாகக் கூறுமிடத்து சென்னைத் தமிழ் எழுத்தாளர் சங்கத்திற்கு, அனைத்திந்தியத் தமிழ் எழுத்தாளர் சங்கம் போட்டி அமைப்பு அல்ல. எழுத்தாளர் சங்கங்களையும், எழுத்தாளர்களையும் கொண்ட அமைப்பு இது தங்களுக்கு மனமிருந்தால் இதனுடன் சேர்ந்து பணி புரியலாம். தங்கள் மனம் மாறி தாங்கள் விரும்பும்போது இதில் வந்து இணைவதற்கும் தடையில்லை. தங்களை வரவேற்க நான் வாசல்படியில் என்றும் காத்திருப்பேன. தங்களின் முடிவான பதிலை எதிர்பார்த்து 29—1—61 தேதி மாலை 4 மணிவரை ஆட்சிக்குழு அறிவிப்பை நிறுத்தி வைக்கிறேன். அன்று 29—1—61 தேதியன்று ராஜாஜி ஹாலில் தொடக்க விழா நடைபெற இருக்கிறது. விழா அழைப்புத் தங்களுக்குத் தனியாக அனுப்பி வைத்திருக்கிறேன் என்றாலும் இத்துடன் ஒன்றும் இணைத்திருக்கிறேன். சங்க அங்கத்தினர்களில் 10 பேருக்கு ஒருவர் வீதம் ஆட்சிக் குழுவிற்கு உறுப்பினர்களைத் தாங்களே தேர்ந்தெடுத்து எனக்கு அறிவித்தால் போதும். தங்கள் வரவால் பெருமன்றத்திற்கும் அதனுடன் இணைவதால் சென்னைச் சங்கத்திற்கும் நெருங்கிய பாசமும் பிணைப்பும் ஏற்படுமென்று மனப்பூர்வமாக நம்புகிறேன். ஒரு நல்ல உள்ளத்தை, பாசமும், பரிவும், பணிவும் உள்ள ஒரு நல்ல நண்பரின் வார்த்தையை நம்பி, துணிந்து முன்னால் அடியெடுத்து வையுங்கள் என்று பணிவன்புடன் வேண்டுகிறேன். இந்த நீண்ட கடிதத்தில் யார்மீதும் குற்றம் சாட்ட வேண்டுமென்ற நோக்கம் எனக்கு இல்லை. யாரையும் குத்திக்காட்ட வேண்டுமென்றும் நான்

நினைக்கவில்லை. அப்படி எந்த வார்த்தையாவது எவர் கண்களுக்காவது பட்டால், அது என் அறியாமையில் உதித்தது என்று ஒதிக்கி, பிழை பொறுத்து நேசக்கரம் நீட்டுமாறு பணிவுடன் வேண்டுகிறேன்.

வணக்கம் பல
தங்கள் அன்புள்ள,
அ. வெ. ர. கிருஷ்ணசாமி,
செயலாளர்.

---

சகோதரர்களே,

இந்த நீண்ட அறிக்கையானது பெருமன்றத்தின் நோக்கத்தைத் தெளிவாக்கும். சென்னைத் தமிழ் எழுத்தாளர் சங்கம், பெருமன்றத்துடன் இணைந்து பணியாற்றலாம் அல்லது மனம் நிறைவு பெறும் வரை இணையாமல் தனித்தும் இயங்கலாம். ஆனால் சென்னைத் தமிழ் எழுத்தாளர் சங்கத்திற்குப் போட்டியாகவோ, பிரதியாகவோ, இந்தப் பெருமன்றம் துவக்கப்பட்டுவிட்டது என்று எவரும் கருதக்கூடாது என்பதே பெருமன்றத்தின் விருப்பமாகும். எழுத்தாளர்களுக்குள் பிளவு ஏற்படுவதோ, கட்சிகட்டி நிற்பதோ தேவையற்றது என்பது தான் பெருமன்றத்தின் கருத்து. நாம் அனைவரும், நாட்டுக்கும், மொழிக்கும், மக்களுக்கும், நமது சிந்தனை பலத்தால் மன திடத்தால் நல்ல வழிகாட்டி, பிறர் போற்ற உயரிய முறையில் சேவை செய்வோம். எழுத்தாளர் அனைவரும் ஒரு குலம். நம்முடைய நோக்கும் ஒன்றுதான், நமது சிந்தனை உருவாகும் முறை மாறுபடலாம் என்றாலும், அது தமிழ்க் குலத்தின் உயர்வுக்கு உகந்ததாகவே இருக்கும் என்பதை மட்டும் கருத்தில் வைத்து ஒன்றுபட்டு பெருமன்றத்தை வலுப்படுத்தும்படி சகோதர எழுத்தாளர்கள் ஒவ்வொருவரையும் பெருமன்றம் வணங்கிக் கேட்டுக்கொள்ளுகிறது.

இங்ஙனம்,
செயலாளர்கள்
அனைத்திந்தியத் தமிழ் எழுத்தாளர் பெருமன்றம்
சென்னை.

கண்ணன் அச்சகம், திருச்சி-2.

# அனைத்திந்தியத் தமிழ் எழுத்தாளர் பெருமன்றம்

சென்னை.

## நேர் உறுப்பினர் விண்ணப்பம்.

செயலாளர் அவர்களுக்கு,

பெருமன்றத்தின் நேர் உறுப்பினராக சேர்த்துக்கொள்ள வேண்டுகிறேன். பெருமன்றத்தின் நோக்கத்தை ஏற்றுக்கொண்டு விதிகளுக்குட்பட்டு நடப்பதாக உறுதி கூறுகிறேன். இத்துடன் நுழைவுக் கட்டணம் ரூ. 1-ம் ஆண்டுக் கட்டணம் ரூ. 4-ம் ஆக ரூ. 5 அனுப்பியிருக்கிறேன்.

விண்ணப்பதாரரின் கையெழுத்து.

பெயர் :

புனைப்பெயர் :

தகப்பனர் பெயர் :

சொந்த ஊர் :

பிறந்த தேதி : (வயது )

அறிந்த மொழி :

எழுத்துத் துறையில் : ஆண்டுகளாக எழுதி வருகிறேன்.

தொழில் :

முகவரி :

எழுதிய நூல்கள் :
அதிகமாக இருப்பின்
தனியாகப் பட்டியல்
எழுதி யிணைக்கவும்.

இதர குறிப்புக்கள்
எவையேனும் இருந்தால்
குறிப்பிடவும்.

கையெழுத்து